ஆ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து குமார் கபடி மன்றத்தின் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல் கணக்கை தயார் செய்யவும்.

| விவரம் | ₹. | விவரம் | ₹. |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.4.2018) | 11,000 | வட்டி மற்றும் வங்கி கட்டணம் | 250 |
| வங்கி மேல் வரைப் பற்று இருப்பு (1.4.2018) | 20,000 | இதர வருமானம் | 350 |
| எழுதுபொருள் வாங்கியது | 5,200 | மைதானம் பராமரிப்பு | 550 |
| பயணச் செலவுகள் | 1,800 | அரசிடமிருந்து பெற்ற மானியம் | 12,000 |
| பங்காதாயம் பெற்றது | 3,000 | தொலைபேசி கட்டணம் செலுத்தியது | 2,800 |
| பொதுச் செலவுகள் | 500 | அறக்கட்டளை நிதி பெற்றது | 10,000 |
| சேர்க்கை கட்டணம் | 4,000 | காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 2,000 |
| தூது அஞ்சல் செலவு | 2,000 | மின்கட்டணம் செலுத்தியது | 5,000 |
| நகராட்சி வரி செலுத்தியது | 3,000 | ரொக்க இருப்பு (31.3.2019) | 1,750 |

26. அ) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவின கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும். ***(அல்லது)***

ஆ) தமிழ்ச்செல்வன் தனது கணக்கேடுகளை இரட்டைபதிவு முறையில் பராமரித்து வருவதில்லை. 2019 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

| | 31.3.2018 ₹. | 31.3.2019 ₹. |
|---|---|---|
| வங்கி ரொக்கம் | 5,000 (ப) | 60,000 (வ) |
| கைரொக்கம் | 3,000 | 4,500 |
| சரக்கிருப்பு | 35,000 | 45,000 |
| பற்பல கடனாளிகள் | 1,00,000 | 90,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 80,000 | 80,000 |
| நிலம் மற்றும் கட்டிடங்கள் | 1,40,000 | 1,40,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,70,000 | 1,30,000 |

தமிழ்ச்செல்வன் தனது சொந்த பயனுக்காக ₹.60,000 எடுத்துக்கொண்டார். அவர் தன் வியாபாரத்தை விரிவுபடுத்த ₹.17,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்கவும். பொறி இயந்திரம் மீது 10% தேய்மானம் நீக்கவும்.

27. அ) பின்வரும் தகவல்களிலிருந்து அனுப்பிரியா மற்றும் மகாலெட்சுமி என்ற கூட்டாளிகளின் முதல் மாறுபடும் முதல் எனக்கொண்டு அவர்களின் முதல் கணக்குகளை தயாரிக்கவும்.

| விவரம் | அனுப்பிரியா ₹. | மகாலெட்சுமி ₹. |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்றைய முதல் (வரவிருப்பு) | 5,00,000 | 4,00,000 |
| 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 70,000 | 40,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 2,000 | 1,000 |
| 2018-ல் இலாப பங்கு | 52,000 | 40,000 |
| முதல் மீது வட்டி | 30,000 | 24,000 |
| ஊதியம் | 45,000 | - |
| கழிவு | - | 21,000 |

***(அல்லது)***

ஆ) கீழ்காணும் கும்பகோணம் கூடைப்பந்து சங்கத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் செலவின கணக்கினை தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ₹. | ₹. | செலுத்தல்கள் | ₹. | ₹. |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | மைதான வாடகை செலுத்தியது | | 12,000 |
| கைரொக்கம் | 23,000 | | அச்சுக் கட்டணம் | | 5,000 |
| வங்கி ரொக்கம் | 12,000 | 35,000 | வங்கி கட்டணம் | | 1,000 |
| அரங்க வாடகை பெற்றது | | 6,000 | கட்டிடம் மீதான காப்பீடு | | 2,000 |
| சந்தா பெற்றது | | 9,000 | தொடர் விளையாட்டு போட்டி செலவு | | 16,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | | 7,000 | தணிக்கை கட்டணம் | | 3,000 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | | 2,000 | விளையாட்டு பொருள் வாங்கியது | | 4,000 |
| | | | இருப்பு கீ/இ | | |
| | | | கைரொக்கம் | 2,000 | |
| | | | வங்கி ரொக்கம் | 14,000 | 16,000 |
| | | 59,000 | | | 59,000 |





# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

தேர்வு எண்

காலம் : 1-30 மணி **XII - கணக்குப்பதிவியல்** மதிப்பெண் : 50

## பகுதி -1

குறிப்பு: ***1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.*** ***(10x1=10)***
***2) ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.***

1. முழுமை பெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
   அ) நிறுமம் ஆ) அரசு
   இ) சிறிய அளவிலான தனியாள் வணிகம் ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்
2. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள்
   அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்
3. உரிமையாளரின் சொத்துக்கள் ₹.85,000 மற்றும் பொறுப்புகள் ₹.21,000 எனில் அவருடைய முதல் தொகை
   அ) ₹.85,000 ஆ) ₹.1,06,000 இ) ₹.21,000 ஈ) ₹.64,000
4. கடனாளிகள் தொடக்க இருப்பு ₹.30,000 பெற்ற ரொக்கம் ₹.1,00,000 கடன் விற்பனை ₹.90,000, கடனாளிகள் இறுதி இருப்பு?
   அ) ₹.30,000 ஆ) ₹.1,30,000 இ) ₹.40,000 ஈ) ₹.20,000
5. வருவாய் மற்றும் செலவின கணக்கு ஒரு
   அ) பெயரளவு ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
6. உயில் கொடை ஒரு
   அ) வருவாயின செலவு ஆ) முதலின செலவு
   இ) வருவாயின வரவு ஈ) முதலின வரவு
7. ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள்; ஆண்டு சந்தாவாக ₹.100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ₹.200; முன்கூட்டி பெற்ற சந்தா ₹.300. வருவாய் செலவின கணக்கில் காட்டப்படவேண்டிய சந்தா தொகையினை கண்டறியவும்
   அ) ₹.50,000 ஆ) ₹.50,200 இ) ₹.49,900 ஈ) ₹.49,800
8. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது முதல்மீது வட்டி
   அ) வழங்கப்படுவதில்லை
   ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
   இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும்
   ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்
9. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
   அ) சமமான விகிதத்தில் ஆ) முதல் விகிதத்தில்
   இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) ஈ) மேற்கூறிய எதுவுமில்லை
10. பின்வருவனவற்றில் எது வருவாய் மற்றும் செலவின கணக்கில் பதியப்படுவதில்லை?
    அ) பழைய செய்தித்தாள் விற்றது
    ஆ) சொத்து விற்பனை மீதான நட்டம்
    ஆ) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம்
    ஈ) அறைகலன் விற்ற தொகை

## பகுதி - 2

குறிப்பு: ***எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 17க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.*** ***(5x2=10)***

11. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?
12. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?
13. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

| விபரம் | ₹. |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்றைய முதல் | 40,000 |
| 2019 மார்ச் 31 அன்றைய முதல் | 50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 7,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 8,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | ? |



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

14. பின்வரும் விவரங்களிலிருந்து 2017, மார்ச் 31, ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினை கணக்கிடவும்.

| சந்தா பெற்றது | ₹. |
|---|---|
| 2015 - 16 - க்காக | 7,500 |
| 2016 - 17 - க்காக | 60,000 |
| 2017 - 18 - க்காக | 1,500 |
| | 69,000 |

2016-17ம் ஆண்டில் பெற வேண்டிய சந்தா ₹.2,400.

2016-17ஆம் ஆண்டிற்கான சந்தா 2015-2016 ஆம் ஆண்டில் பெற்றது ₹.1,000.

15. பின்வரும் விவரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ₹. |
|---|---|
| பந்து மட்டைகள் தொடக்க இருப்பு | 3,000 |
| அவ்வாண்டில் வாங்கிய பந்து மட்டைகள் | 17,000 |
| பழைய பந்து மட்டைகள் விற்பனை | 2,000 |
| பந்து மட்டைகள் இறுதியிருப்பு | 4,000 |

16. கவிதா, காவியா இருவரும் கூட்டாளிகள் கவிதா ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் ₹.2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்பு மீது வட்டி ஆண்டுக்கு 4% எனக் கொண்டு எடுப்பு மீது வட்டி கணக்கிடுக.

17. 2019 மார்ச் 31, அன்று மிதிலேஷ் என்பவரின் ஏடுகளிலிருந்து பெறப்பட்ட இருப்புகள் பின்வருமாறு.

| விவரம் | ₹. | விவரம் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 6, 00,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,20,000 |
| அறைகலன் | 80,000 | கைரொக்கம் | 20,000 |
| நிலம் மற்றும் கட்டிடம் | 3,00,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 |
| பற்பல கடனாளிகள் | 3,20,000 | சரக்கிருப்பு | 2,20,000 |

2019 மார்ச் 31ம் நாளைய நிலையறிக்கை தயாரித்து அந்நாளைய முதல் கண்டறிக.

பகுதி - 3

***குறிப்பு: ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.***

***வினா எண். 24க்கு கட்டாயம் விடையளிக்கவும்.*** ***(5x3=15)***

18. முழுமை பெறா பதிவேடுகள் இயல்புகள் யாவை?

19. நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளில் மூன்றினை மட்டும் தருக.

20. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையை கணக்கிடவும்.

| விவரம் | ₹. | விவரம் | ₹. |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |
| 2018 ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | உள்திருப்பம் | 50,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | | |
| வாராக் கடன் | 30,000 | | |
| 2019 மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 90,000 | | |
| 2019 மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 2,40,000 | | |



www.Trb Tnpsc.Com

21. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து ஜனவரி விளையாட்டு மன்றத்தின் 2018, டிசம்பர் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினை தயார் செய்யவும்.

| விவரம் | ₹. | விவரம் | ₹. |
|---|---|---|---|
| கைரொக்கம் (1.1.2018) | 4,000 | அச்சுக்கட்டணம் செலுத்தியது | 2,500 |
| சம்பளம் கொடுத்தது | 3,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது | 10,000 | தொடர் விளையாட்டு போட்டி வரவுகள் | 14,000 |
| சந்தா பெற்றது | 15,000 | தொடர் விளையாட்டு போட்டி செலவுகள் | 10,500 |
| வாடகை பெற்றது | 2,000 | முதலீடுகள் வாங்கியது | 25,000 |

22. ஊட்டி மனமகிழ் மன்றத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவின கணக்கினை தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ₹. | செலுத்தல்கள் | ₹. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு கை ரொக்கம் | 5,000 | விளையாட்டு பொருள் வாங்கியது | 10,000 |
| வாடகை பெற்றது | 10,000 | எழுதுபொருளுக்காக செலுத்தியது | 7,000 |
| முதலீடுகள் விற்றது | 8,000 | கணிப்பொறி வாங்கியது | 25,000 |
| சந்தா பெற்றது | 54,000 | சம்பளம் | 20,000 |
| | | இறுதி இருப்பு கை ரொக்கம் | 15,000 |
| | 77,000 | | 77,000 |

23. மதன் மற்றும் ஜெகன் என்ற இரு கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற இலாப விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று அவர்களின் முதல் கணக்குகளின் இருப்புகள் மதன் ₹.3,00,000 மற்றும் ஜெகன் ₹.2,00,000 ஆகும். 2018 ஜூலை 1 அன்று மதன் கூடுதல் முதலாக ₹.60,000 கொண்டு வந்தார். அவ்வாண்டில் ஜெகன் ₹.30,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிட்டு, அதற்குரிய குறிப்பேட்டு பதிவுகளை தரவும்.

24. 2018, ஏப்ரல் 1 அன்று ரணித்தா தன்னுடைய தொழிலை 1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளை பராமரிக்க வில்லை. 2019, மார்ச் 31 அன்று அவரது ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு.

| விவரம் | ₹. | விவரம் | ₹. |
|---|---|---|---|
| வங்கி மேல் வரைப் பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கைரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ₹.2,500ஐ மாதந்தோறும் எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹.40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

பகுதி - 4

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.*** ***(3x5=15)***

25. அ) இரட்டை பதிவு முறைக்கும் முழுமைபெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை? (5 மட்டும்)

***(அல்லது)***



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com